செய்தி வெளியீடு எண்:113 நாள் :17.03.2015

## மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதல்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் திடீர் ஆய்வு

- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்ட பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் ரூ.21.73 கோடி அளவிற்கு, 75,74,282 கிலோ காய்கறிகள் விற்பனை.
- விவசாயிகள் விளைவிக்கும் காய்கறிகளுக்கு உரிய விலை
- பொதுமக்களுக்கு தரமான காய்கறிகள் விநியோகம்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் இன்று 17.3.2015 சென்னை, தேனாம்பேட்டை டி.யூ.சி.எஸ். மற்றும் அண்ணாநகரில் உள்ள சிந்தாமணி பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்குள்ள பொதுமக்களிடம் காய்கறிகளின் தரம் மற்றும் விலை குறித்து கேட்டறிந்தார். அப்போது அங்குள்ள பொதுமக்கள் காய்கறிகள் பசுமை வாய்ந்ததாகவும், தரமானதாகவும் குறைந்த விலையிலும் விற்பனை செய்யப்படுவதாக கூறினார்கள்.

அப்போது, ''மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது:

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காய்கறிகளின் விலையை கட்டுப்படுத்த நகர்ப்புற பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் விவசாயிகளையும் நுகர்வோர்களையும் நேரடியாக இணைக்கக் கூடிய வகையில் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை கடந்த 20.6.2013 அன்று திறந்துவைத்தார்கள். தற்போது தமிழகத்தில் 58 பண்னை பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் சென்னை மாநகரில் 42 கடைகளும், கோயம்புத்தூரில் 10 கடைகளும், மதுரையில் 4 கடைகளும், தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலையில் தலா 1 கடைகளும் செயல்படுகின்றன. சென்னையில் 2 நகரும் பண்ணைப்பசுமை நுகர்வேர் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் அதாவது 15.3.2015 வரையில் 75,74,282 கிலோ டன் காய்கறிகள் ரூ.21.73 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மேலும், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் விற்பனை செய்வதற்கென, திண்டுக்கல், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், காய்கறி கொள்முதல் மையங்கள் அமைத்து, தரமான காய்கறிகளை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன. மேலும், நாசிக் நகரில் உள்ள லாசர்கான் என்கின்ற இடத்திலிருந்து பெல்லாரி வெங்காயம் நேரடியாக கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படி காய்கறிகளை பொதுமக்களுக்கு கொண்டு செல்வதற்கு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள செட்டிப்பள்ளி, பாகலூர், இராயக்கோட்டை ஆகிய 3 கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 6 டன் கொள்ளவு கொண்ட குளிரூட்டப்பட்ட ஒரு வாகனமும், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு ஒரு வாகனமும், திண்டுக்கல் மாவட்டம், பழனி வேளாண் விற்பனைச் சங்கத்திற்கு ஒரு வாகனமும், சென்னையில், நடமாடும் பண்ணை பசுமைக் கடைக்கென 2 வாகனமும் என மொத்தம் ரூ.105 இலட்சம் செலவில் 5 வாகனங்கள் வாங்கப்பட்டு, காய்கறிகள் விளையும் இடத்திலிருந்தே பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு கொண்டு வரப்படுகின்றன. இதனால், நடுத்தர மக்கள் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாமல் குறைந்த விலைக்கு தரமான காய்கறிகளை வாங்கி பயன்பெறுவதோடு, ஏழை, எளிய விவசாயிகளும் இடைத்தரகர் இன்றி அவர்கள் விளைவித்த காய்கறிகளுக்கு நல்ல விலையை நிர்ணயம் செய்து உடனுக்குடன் உரிய தொகையையும் பெறுகின்றனர். காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு காய்கறி பயிர் கடனாக மட்டும் 1.42014 முதல் 28.2.2015 வரை 18,043 விவசாயிகளுக்கு ரூ.105.60 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் இஞ்சி மற்றும் பூண்டு பயிர்களுக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை ஒன்றுக்கு ரூ.10.00 இலட்சம் வீதம் வட்டியில்லாக் கடனாக மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதனால், எந்த ஒரு கூட்டுறவுச் சங்கமும் நட்டத்தில் இயங்கவில்லை.

கருணாநிதி ஆட்சிக்காலத்தில் விலைவாசி ஏற்றம் கட்டுக்கடங்காமல் இருந்தததை கருத்திற்கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கு பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் குறைந்த விலையில் தரமான காய்கறிகள் விற்பனை, விலையில்லா அரிசி, ரூ.20க்கு ஒரு கிலோ அரிசி போன்ற உன்னதமான திட்டத்தை கூட்டுறவுத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு இன்று கூட்டுறவு நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை ஆற்றி வருகிறது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமையுடன் கூறிக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) திரு.எம்.அந்தோணிசாமி ஜான் பீட்டர், சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர் திரு.ராஜேந்திரன், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

This document was created using Smart PDF Creator
To remove this message purchase the product at www.SmartPDFCreator.com